**இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக அபிவிருத்தி செயற்திட்டம் - கட்டம் 1பீ - 2018**

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக அபிவிருத்தி செயற்திட்டம் - கட்டம் 1பீ இன் 2018 செப்தெம்பர் 30 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 திசெம்பர் 20 ஆந் திகதிய 836 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் உயர் கல்வி அமைச்சாகவிருந்த தற்போதைய நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. பிரதேசரீதியான மற்றும் தேசியரீதியான தேவைகளைப் பிரதிபலிப்பதற்காக குறிப்பிடப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டக் கற்கைநெறிகளின் தரத்தை முன்னேற்றுவதன் மூலம் இலங்கையின் சமூக அபிவிருத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு துணைபுரிவதையும் மாணவர் மற்றும் பதவியணியினர் தங்குமிடம், மீள் உருவாக்கம் மற்றும் நலன்புரி நோக்கங்கள் என்பனவற்றுக்கான வசதிகளை வழங்கி தேவையான கல்விசார் அபிவிருத்தி திட்டத்தை அபிவிருத்தி செய்வதன் மூலமும் புதிய கேள்வியை தூண்டக்கூடிய பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலமும் மாணவர் எண்ணிக்கையை அதிகரிப்பதையும் இலக்காகக் கொண்டு அம்பாறையிலுள்ள இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தினை அபிவிருத்தி செய்வது செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,812 மில்லியனிற்குச் சமமான குவைத் டினார் 3.5 மில்லியனானதுடன் இதில் ரூபா 1,421 மில்லியனிற்குச் சமமான குவைத் டினார் 3 மில்லியன் தொகை அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைத்து நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2012 செப்தெம்பர் 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2018 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படும் திகதி 2019 செப்தெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2018 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் செயற்திட்டத்தால் அமுல்படுத்தப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட சம்மாந்துறை மற்றும் ஒலுவிலிலுள்ள நீரியல் ஆய்வுகூடம், பொதுச் சிற்றூண்டிச்சாலை, கல்விசார் நிகழ்ச்சித்திட்ட நிலையம் மற்றும் மாணவர் விடுதிகளிற்கான கட்டிடங்களின் நிர்மாண வேலைகள் மற்றும் விளையாட்டு மைதானத்தின் நிர்மாணம் மற்றும் ஏற்கனவேயுள்ள விளையாட்டரங்கு கட்டிடத்தின் விரிவாக்கம் போன்ற செயற்பாடுகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. 2018 மே 31 இலேயே கோட்போர் கூடத்தின் மிகுதி நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

### 2.2 பயன்படுத்தப்படாத நிதி வளங்கள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவக் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| ரூபா 53.70 மில்லியனுக்கு சமமான குவைத் தினார் 91,502 கடன் பெறுகைகள் 2018 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு செலவிடப்படாதிருந்தன. | ஏனைய வேலைகளுக்கான நிதிகளை பயன்படுத்துவதற்கான சாத்தியத்தன்மை | பயன்படுத்தப்படாத கடன் மீதி தொடர்பான முன்மொழிவு ஒன்றை சமர்ப்பிப்பதற்கு உயர்கல்வி அமைச்சின் செயலாளரிடமிருந்து 2018 ஒக்தோபர் 09 இல் வேண்டுகோளொன்று வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | (அ) கடன் பெறுகைகளின் சேமிப்பிற்கான காரணங்கள் புலனாய்வு செய்யப்பட வேண்டும்.<br>(ஆ) பயனுள்ள வகையில் நிதிகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.3 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவக் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் 2019 பெப்ரவரி 06 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் 2019 செப்தெம்பர் 30 வரை செயற்திட்ட காலப்பகுதி நீடிக்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2018 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு 09 மாதக் காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் நிதியாண்டு அடிப்படை நிலையாக பிரயோகிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முடிவடைந்த 03 மாத காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்களை தயாரித்து தொடர்ந்துவரும் நிதியாண்டில் சமர்ப்பித்தல் வேண்டும். |